**Press Release No. 198** **dt.5.4.07**

**பொது (தேர்தல்கள்III) துறை**

# பத்திரிக்கைச் செய்தி

இந்திய எல்லை மறுவரையறை ஆணையம், தமிழ்நாடு மாநிலத்தின் இணை உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து, தமிழ்நாட்டிலுள்ள மக்களவை மற்றும் சட்டப்பேரவை தொகுதிகளின் எல்லைகளை 2001 மக்கட்தொகை அடிப்படையில் மறுவரையறை செய்வதற்கான கருத்துருக்களை வெளியிட்டுள்ளது. இக்கருத்துருக்கள் மத்திய மற்றும் மாநில சிறப்பு அரசிதழ்களில் 05042007 நாளன்று வெளியிடப்பட்டுள்ளன. இந்த சிறப்பு அரசிதழ்களின் நகல்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகங்களில் ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ளன.

2. இக்கருத்துருக்கள் குறித்த ஆட்சேபணைகள் அல்லது ஆலோசனைகளை இந்திய எல்லை மறுவரையறை ஆணையம் கேட்டுள்ளது. அத்தகைய ஆட்சேபணைகள் அல்லது ஆலோசனைகளை செயலாளர், எல்லை மறுவரையறை ஆணையம், நிர்வாசன் சதன், அசோகா ரோடு, புது டெல்லி110 001 என்ற முகவரிக்கு 2007ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 18ம் நாள் (புதன் கிழமை) அன்று மாலை 1700 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்க வேண்டும். இவைகள் எல்லை மறுவரையறை ஆணையத்தால் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி பொது மக்களுடன் கலந்தாய்வில் எடுத்துக்கொள்ளப்படும் :

| பொது மக்களுடன் கலந்தாய்வு செய்யப்படும் நாள் மற்றும் நேரம் | பொது மக்களுடன் கலந்தாய்வு செய்யப்படும் இடம் | சட்டப் பேரவை மற்றும் அதற்கு சம்பந்தப்பட்ட மக்களவைத் தொகுதிகளின் கருத்துருக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் மாவட்டங்கள் |
|---|---|---|
| 17052007<br>காலை 10.00 மணி<br>(முதல் கூட்டம்) | மாநகராட்சி கலையரங்கம், ஆர்.எஸ். புரம், கோயம்பத்தூர் | சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| பிற்பகல் 2.30 மணி<br>(இரண்டாவது கூட்டம்) | | நீலகிரி, ஈரோடு, கரூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள் |
| 19052007<br>காலை 10.00 மணி<br>(முதல் கூட்டம்) | வெள்ளிவிழா ஆண்டு அரங்கம், மதுரை மருத்துவ கல்லூரி வளாகம், மதுரை | சிவகங்கை, ராமநாதபுரம், தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்கள் |
| பிற்பகல் 2.30 மணி<br>(இரண்டாவது கூட்டம்) | | கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் |
| 20052007<br>பிற்பகல் 2.00 மணி<br>(இரண்டாவது கூட்டம்) | ரத்தின வேல் தேவர் உறால்- கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ்,<br>எண். 74, மேற்கு புல்வார்டு சாலை, திருச்சிராப்பள்ளி8. | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள். |
| 21052007<br>காலை 10.00 மணி<br>(முதல் கூட்டம்) | ரத்தின வேல் தேவர் உறால்- கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ்,<br>எண். 74, மேற்கு புல்வார்டு சாலை, திருச்சிராப்பள்ளி8. | புதுகோட்டை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் |
| 22052007<br>காலை 10.00 மணி<br>(முதல் கூட்டம்)<br><br>பிற்பகல் 2.30 மணி<br>(இரண்டாவது கூட்டம்) | சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை5. | வேலூர், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்<br><br>காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்கள் |

தலைமைத் தேர்தல் அதிகாரி.

Issued By:

DIPR, Chennai-9.